ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

e-Newsletter

Vol 02: No: 10 - November 2012

Website: www.pccsl.lk
E-mail: pccsl@pccsl.lk
Tel: +94 115 353635
Fax: +94 115 335500

# தாக்கமுள்ள சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை மூலமே கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியும்

"ஊடக ஒழுங்குவிதிகள்" தொடர்பாக இங்கிலாந்தின் ஈஸ்ட் ஹன்ட் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது இங்கிலாந்தின் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் லோட் ஹன்ட் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகின்றது. இந்த கலந்துரையாடல் 2012 நவம்பர் 29 ஆம் திகதி இடம்பெற்றது.

இங்கிலாந்தில் முக்கிய புள்ளிகளின் தொலைபேசிகளை ஒட்டுக் கேட்டல் விவகாரத்தால் பத்திரிகை நிலையத்தை மூட வேண்டியேற்பட்ட "நியுஸ் ஒப் த வோ்ல்ட்" பத்திரிகை தொடர்பான விசாரணை அறிக்கையை நீதிபதி பிரபு பிரயன் லோசன் சமர்ப்பித்துள்ளார். அவரின் பங்களிப்புக்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏற்கனவே "நியுஸ் ஒப்த வோ்ல்ட்" பத்திரிகை தொலைபேசிகளை ஒட்டுக் கேட்டலுக்கு உதவிய அதிகாரிகளுக்கு முறைகேடான அடிப்படையில் பணம் வழங்கியமை மற்றும் தொலை பேசி ஒட்டுக் கேட்டல் சம்பவத்துடன் தொடர்புபட்ட இளவயதுடைய ஒருவரின் கொலை உட்பட பலவிடயங்கள் தொடர்பாக விசார-ணைகள் மேற்கொள்ளப்ட்டன.

இந்த விசாரணைக்குழு இங்கிலாந்து பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்டதாகும். எவ்வாறாயினும் ஊடகவியலாளர்களில் ஒரு சிறு குழுவினரின் நடத்தை காரணமாகவே ஊடகத்துறையில் தவறுகள் இடம்பெறுகின்றன. ஊடகத்துறைக்கான ஒழுங்கு விதிகள் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கு மேலும் பலத்தையும் பாதுகாப்பையும் ஊடக தொழில்த் துறைக்கு சிறந்த தரச் சான்றிதழையும் வழங்குவதாய் அமைகின்றது. குறிப்பிட்ட அறிக்கை தொலைபேசி ஒட்டுக் கேட்டலோடு சம்பந்தப்பட்ட விடயங்களை மட்டும் கவனம் செலத்தாது மேலும் ஊடகத்துறையின் மேம்பாட்டுக்கான பல விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பத்திரிகைளும் சஞ்சிகைகளும் மக்கள் மத்தியில் உயர்வான நம்பிக்கையைப் பெறும் வகையில் இருப்பைப் பலப்படுத்திக் கொள்வது எவ்வாறு என்பது இன்று மிகவும் முக்கியமான விடயமாகும்.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள சுய கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் தொடர்பாக அண்மைக்காலமாக மறுசீரமைப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பது உணரப்படுகின்றது. இதில் 2009 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட திருத்தங்களும் முக்கியமானவையாகும். ஒவ்வொரு தொழிலிலும் அத்தொழில்த் துறையின் மகோன்னதம் பேனப்படுவதற்கு உயர்வான வழிகாட்டல்களாக அமைவது கட்டுப்பாடுகள் ஒழுங்குவிதிகள் என்பனவாகும் ஊடகத்துறையிலும் மக்களுக்கு இருக்கின்ற பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கும்



பிரபு டேவிட் ஹன்ட் ~ தலைவர், இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ( படம் ~ மாடின் கொட்வின் ~ கார்டியன் படப்பிடிப்பாளர்)

தகவல்களை அறிவதற்கான சுதந்திரத்தையும் மேலும் வலுப்படுத்துவதற்கு ஒழுக்கக்கோவைகளும் ஒழுங்குவிதிகளும் கைகொடுக்கின்றன.

நமது செயலுக்கு மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட வேண்டும். எந்தவொரு பத்திாகையாளரும் ஊடகவியலாளரும் "பொதுமக்கள் ஆர்வம்" என்ற விடயத்தின் அடிப்படையில் பலமான சுயகட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுவதென்று எடுத்துக் கொள்ளும் உடன்பாடானது ஊடகத் தொழிலையும் குறிப்பிட்ட பத்திரிகை அல்லது சஞ்சிகையையும் அதன் போக்கில் சிறந்த தராதரத்தைப் பேனுகின்றது என்பதற்கான உத்தரவாதமாக அமைகின்றது.

அதுமட்டுமல்லாது ஊடகவியலின் தராதரத்தையும் மேல்நிலைக்கு கொண்டு செல்வதாய் அமைகின்றது. ஊடகத்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## Inside

- பாலியில் நடைபெற்ற ஊடக ஒன்றியத்தின் 4 ஆவது மாநாட்டின் அறிக்கை - பக்கம் 02
- பேஸ் புக் புகைப்படத்திற்கு எதிரான முறைப்பாடு - பக்கம் 03
- இளவரசி ஹரியின் புகைப்படம் தொடர்பான சர்ச்சை - பக்கம் 04

## பாலியில் நடைபெற்ற ஊடக ஒன்றியத்தின் 4 ஆவது மாநாட்டின் அறிக்கை

# ஒழுக்கவியல் இதழியலும் பிரசைகள் ஊடகமும் : சனநாயத்திற்கு உதவும் வகையில் மக்களுக்காக குரல் எழுப்புகின்றது

இந்துனேசியாவின் பாலித் தீவில் ஊடக ஒன்றியத்தின் 4 ஆவது மாநாடு 2012 நவம்பர் மாதம் 07 ~ 09 ஆம் திகதி வரை நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு 17 நாடுகளைச் சேர்ந்த 55 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டை இங்கிலாந்தின் தோம்சன் பவுன்டேசன் நிறுவனம், இந்துனேசியாவின் பத்திரிகைப் பேரவை, மற்றும் சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான நிறுவனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

அவுஸ்திரேலியா, பெல்ஜியம், எகிப்து, காம்போடியா, ஹொங்கொங், இந்துனேசியா, மலேசியா, இலங்கை, இங்கிலாந்து, பிலிபைன்ஸ், நோர்வே, பாகிஸ்தான் உட்பட 17 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றினர். இந்த மாநாட்டின் நிறைவில் அறிக்கையொன்று வெளியிடப்பட்டது.

ஒழுக்கவியல் இதழியலும் பிரசைகள் ஊடகமும்: சனநாயத்திற்கு உதவும் வகையில் மக்களுக்காக குரல் எழுப்புகின்றது என்ற தலைப்பில் நடைபெற்ற இம்மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புதிய கலாச்சாரத்துடன் இணைந்ததாக ஒழுக்க நெறிக்கோவை மற்றும் ஊடக தராதரம் என்பவற்றின் அடிப்படையில் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தம் வகையில் ஆசியாவிலும் மத்திய கிழக்கிலும் மாறிவரும் சூழலை இந்த மாநாடு வரவேற்கின்றது. ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி என்பவற்றை உறுதி செய்யும் வகையில் ஊடக சுதந்திரமானது மக்களது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் குறிக்கோலில் சாதகமான சூழ்நிலைகள் ஏற்பட அரசாங்கங்கள் ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

அத்துடன் அதற்கான அடித்தளம் இடப்படுவது அரசியல் மற்றும் சட்டரீதியான பாதுகாப்பின் அடிப்படையிலாகும் என்பதில் மாநாட்டின் பிரதிநிதிகள் உறுதியாக இருக்கின்றனர். ஏல்லாவகையான ஒழுக்க நெறிக்கோவைகளும் அரச-ியல் செல்வாக்குகளுக்கு அப்பாட்பட்டதாகும். ஊடகவியலானது எந்த விதமான சட்ட மற்றும் அர சியல் அலுத்தங்களுக்கும் உட்பட்டதாக இருக்கக் கூடாது. அரசாங்கங்கள் ஜனநாயகத்தின் பெயரால் ஊடக சுதந்திரத்தையும் ஊடகவியலாளர்களது பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் போதே ஊடக சுதந்திரம் முழுமையாகப் பேனப்படுகின்றது என்பது அர்த்தமாகும்.

ஊடகத்துறையில் தொழில் ரீதியாகவும் சுதந்திரமானதுமான அடிப்படையிலான எல்லா மாற்றங்களுக்கும் அரசாங்கங்கள் உதவிபுரிய வேண்டும்.

- நல்லாட்சி மற்றும் ஊடக சுதந்திரம் என்பவற்றை இலக்காகக் கொண்டு செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படல்
- ஜனநாயகத்தில் சுதந்திர ஊடகத்திற்காகன சமூகத்திற்கு கல்வி அறிவூட்டலுக்காக பங்களிப்பு செய்தல்
- ஊடகங்களுக்கும் அதன் வாசகர்கள் அல்லது ரசிகர்களுக்குமிடையிலான முரண்பாடுகளை சுமுகமாக தீத்துவைப்பதற்கு மத்தியஸ்தம் வழங்குதல்
- பொதுமக்களுக்கு தகவல்களை அறிந்து கொள்வதற்கான வசதிகளை அதிகரிப்பதோடு தகவல் தொழில்நுட்பத் துறையில் அறிவூட்டலை மேற்கொள்ளும் போது பொதுமக்கள் சனநாயகத்தில் முழுமையான பங்களிப்பை வழங்கச் செய்ய முடியும்

ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் ஊடக சுதந்திரம் மற்றும் ஊடகவலியலாளர்களின் சுதந்திரமான செயற்பாட்டை உறுதி செய்தல், சுயாதீன சுயகட்டுப்பாட்டு ஒழுக்க நெறிக்கோவை மற்றும் தரமான ஒழுக்கக்கோவைப் பின்பற்றலுக்கான கட்டமைப்பு என்பவற்றை ஏற்படுத்தவதற்கான அவசரமான செயற்றிட்டங்களை முன்வைத்து அமுல்படுத்துவது அவசியமாகின்றது.

பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை முன்னெடுப்பு செயற்பாட்டுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இவ்விடயத்தில் இந்த அமைப்பு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவும் தயாராக இருப்பதாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மியன்மார் தொடர்பாகவும் இந்த அமைப்பு கவனம் செலுத்தவிருக்கின்றது. குறிப்பாக அங்கு ஊடக மறுசீரமைப்புக்களை முன்னெடுப்பாதற்கான இடைக்கால குழுவொன்றை ஏற்படுத்தவும் ஊடக ஒழுக்கக்கோவை

(தொடர்ச்சி 3ம் பக்கம்)




பாலித் தீவில் நடைபெற்ற நான்காவது ஊடக ஒன்றிய மாநாட்டின் போது பிடிக்கப்பட்ட படம். இந்துனேசியாவின் பத்திரிகைப் பேரவையின் உப தலைவர் பம்பங் ஹரிமர்ட்டி உட்பட கலந்து கொண்ட பிரதிநிதிகளை படத்தில் காணலாம்

# பேஸ் புக்  புகைப்படத்திற்கு எதிரான முறைப்பாடு தொடர்பாக இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தீர்ப்பு

இங்கிலாந்தின் "பர்ன்ஹம் ஹெரல்ட்" பத்திரிகை இருவருக்கிடையில் நடைபெற்ற மோதல் சம்பவம் ஒன்றின் போது சர்ச்சையில் ஈடுபட்ட ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் நடத்தி காயப்படுத்தும் வகையிலான புகைப்படம் ஒன்றை குறிப்பிட்ட விடயம் தொடர்பான செய்தியுடன் பிரசுரித்திருந்தது. அப்புகைப்படம் முரண்பாட்டில் ஈடுபட்டவரின் "பேஸ் புக்கில்" இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாகும். மற்றவரை தாக்கியவரே அப்புகைப்படத்தை அவரின் முகப்புப் புத்தக சமூக வலைப்பின்னலில் (பேஸ் புக்) பதிவேற்றம் செய்திருந்ததால் குறிப்பிட்ட சஞ்சிகை அப்புகைப்படத்தைப் பெற்று பிரசுரம் செய்திருந்தது.

அதே நேரம் குறிப்பிட்ட இருவருக்கிடையில் நடைபெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக பொலீசார் விசாரணைகளை மேற்கொண்ட போதும் தாக்குதலை மேற்கொண்டு மற்ற நபரின் மூக்கில் காயத்தை ஏற்படுத்தியவரை கண்டு பிடிக்க முடியாமல் இருந்த நிலையில் இப்புகைப்படம் "பர்ன்ஹம் ஹெரல்ட்" பத்திரிகையில்  பிரசுரமாகியிருந்தது.

இப்புகைப்படம் பிரசுரமாகிய பின்னர் அதனைக் கண்ணுற்ற தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட நபர் அப்புகைப்படம் அவரின் கௌரவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்ட பிரசுரம் இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக்கோவையின் சரியான அறிக்கையிடல் தொடர்பான பிரிவு 1 மற்றும் ஒருவரின் தனிப்பட்ட வாழ்வில் தலையிடல் தொடர்பான பிரிவு 3 ஆகியவற்றை மீறியிருப்பதாக இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்திருந்தார்.

இம்முறைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்திய இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு இந்த முறைப்பாட்டில் முறைப்பாட்டாளர் தெரிவித்தபடி ஒழுக்கக்கோவையின் குறிப்பிட்ட பிரிவுகள் மீறப்படவில்லை என்று தீர்ப்பளித்திருந்தது.  இவ்வாறு தீர்ப்பளிக்கக் காரணம் குறிப்பிட்ட சண்டையில் ஈடுபட்டவரே அவர் மற்றவரைத் தாக்கும் விதமாக புகைப்படத்தில்அவரின் பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றியிருந்ததால் அதில் இரகசியம் இருக்க முடியாது என்பதோடு பொலீசாருக்கு குற்றவாளியைக் கண்டு பிடிக்க அந்தப் புகைப்படம் உதவுவதாக பத்திரிகை கருதியதாலும் அதனைப் பிரசுரம் செய்திருந்ததில் தவறு ஏதும் இருக்க முடியாது. அத்துடன் தனித்துவம் பேனப்படுவதாக இருந்திருந்ததால் சம்பந்தப்பட்ட நபர் அப்புகைப்படத்தை அவரின் "பேஸ்புக்"கில் பதிவேற்றியிருக்கக் கூடாது என்று இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முறைப்பாட்டு விசாரணைக்குழுவின் தலைவர் சாலட் டேவர்  தாமது தீர்ப்பில் தெரிவித்திருந்தது.

அத்துடன் நவீன காலத்தில் அறிக்கையிடலில் செய்திக்குரிய மூலம் தொடர்பாக கவனம் செலுத்தும் போது இவ்வாறான பேஸ்புக் போன்றவற்றில் வெளிவரும் விடயங்களைத் தழுவியதாக பிரசுரங்கள் அமையும் போது பிரச்சினைகள் வருவது அச்சு ஊடகத்துறையில் புதிய சவால்களாகும். ஆயினும் அவை சரியாகவும் செய்தி வெளியீட்டுடன் பொருந்தும் வகையிலும் ஆணைக்குழுவின் ஒழுக்கக்கோவையின் பிரிவுகளை மீறாத வகையிலும் அமையுமானால் அத்தகைய விடயங்கள் அனுமதிக்கத் தக்கதாகும் என்றும் அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியுள்ளார். (நன்றி : இ.ப.மு.ஆ.கு 2012 நவம்பர் 28)

---

## பாலியில் நடைபெற்ற ஊடக ஒன்றியத்தின் 4 ஆவது மாநாட்டின் அறிக்கை

(2ம் பக்க தொடர்ச்சி)

இல்லாத நாடுகளுக்கு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கவும் தயாராக இருக்கின்றது.

இவ்விடயத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- ஊடக நிலைமைகளோடு சம்பந்தப்பட்ட அடிப்படை விடயங்களை மையமாகக் கொண்டு ஒரு அறிக்கையைத் தயரித்தல். அரசாங்க தலையீடு மற்றும் ஒழுக்கக்கோவைச் செயற்பாடுகள் மற்றும் ஒன்லைன் செய்தித் தகவல் வெளியீடுகளிலான தராதரம் என்பன தொடர்பாக கவனம் செலுத்துதல்.
- ஒழுக்கக்கோவைத் தத்துவத்தை அடிப்பயைடாகக் கொண்ட பயிற்சியளித்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
- சுயாதீன சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் ஏனைய செயலணிக் குழுக்களுடன் இணைந்து செயற்படல்

இவற்றுக்கு மேலதிகமாக இத்துறையில் எதிர் நோக்கப்படுகின்ற சவால்களை வெற்றி கொள்வதற்காக ஊடகவியலாளர்களுக்கு பயிற்சியளித்தல் உட்பட திட்டங்களை முன்னெடுத்தல் அவசியமாகின்றது என்றும் அமைப்பு கருதுகின்றது.

அத்துடன் அடுத்த வருடம் நடைபெறுகின்ற அமைப்பின் 5 ஆவது மாநாட்டிற்கு மேலும் பல நாடுகளில் இருந்து ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளை அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## இளவரசி ஹரியின் புகைப்படம் தொடர்பான சர்ச்சையையடுத்து தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பான விடயங்களை பிரசுரிப்பதில் புதிய வழிகாட்டல்கள்

இங்கிலாந்தின் முடிக்குரிய இளவரசி ஹரி அண்மையில் வெளிநாடொன்றில் உள்ளாசமாக பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த போது அரைகுறை ஆடையுடன் இருந்ததை அந்நாட்டின் சஞ்சிகையொன்று அப்பட்டமாக பிரசுரம் செய்திருந்தமையால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. இத்தகைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பாதிக்கும் வகையிலான புகைப்படங்களை அல்லது விடயங்களை பிரசுரம் செய்ய முடியுமா என்ற கேள்வி பரவலாக ஏற்பட்டது. இவ்விடயம் பகிங்ஹாம் மாளிகைக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திய விடயமாகும்.

இன்று உலகில் துரிதமாக ஏற்பட்டு வருகின்ற “சமூக வலைப்பின்னல் பரவலாக்கம்” காரணமாக அவற்றின் ஊடாக நிகழும் தவல் பரிமாற்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாதளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன. அதனால் இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்திய இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தனிப்பட்ட வாழ்க்கையுடன் தொடர்புடைய விடயங்களைப் பிரசுரம் செய்கின்றபோது கடைபிடிக்க வேண்டிய சில வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளது.

இ.ப.மு.ஆ.கு வின் பத்திரிகைத்துறைசார் ஒழுக்கக்கோவையில் பிரிவு 03 தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பாக குறிப்பிடுகின்றது. இத்தகைய விடயங்களைப் பிரசுரம் செய்கின்றபோது தனிப்பட்ட வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையிலும் கௌரவம், குறிப்பிட்ட நபரின் பிரசித்தம் என்பவற்றைப் பாதிக்காத வகையிலும் விடயங்களும் புகைப்படங்களும் அமைய வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

ஹரி தொடர்பான புகைப்படங்கள் அவரின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பாதிப்பதாய் அமைந்திருந்ததோடு அவருக்கு சுதந்திரமாக பொழுதைக் கழிப்பதற்கு இருக்கும் உரிமையை மீறும் செயலாகவும் பொதுமக்கள் இங்கிலாந்து மக்கள் கருதுவதாக உள்ளது. அதனால் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் பிரசித்தம் பெற்ற மனிதர்கள் தொடர்பாக இத்தகைய விடயங்களை பிரசுரம் செய்ய முன்னர் அது தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்துவது அவசியமாகின்றது.

பொதுமக்கள் ஆர்வம் என்ற அடிப்படையில் புகழ்பெற்ற நபர்களது விடயங்களாயினும் அத்தகைய விடயங்களை பிரசுரிப்பதால் ஏன்படும் பின்விளைவுகள் மற்றும் மோசமான பாதிப்புக்கள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு சில வழிகாட்டல்களை வெளியிட்டிருக்கின்றது. இது தொடர்பாக இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் முறைப்பாட்டு தீர்வுக் குழுவின் தலைவர் சார்லட் டெவர் குறிப்பிடுகையில் “சமூக வலைத்தளங்கள் ஒருபோதும் பாதிப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதில்லை. அவற்றுக்கு ஒழுக்கக்கோவை என்ற விடயம் அவ்வளவு பெரிதாக இல்லை. நினைத்தபடி எதையும் பதிவேற்றம் செய்கின்றன. ஆனால் பொதுமக்கள் ஊடகம் என்ற நிலையில் இருந்து நோக்குகின்ற போது பத்திரிகைகள் சஞ்சிகைகள் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக அதிகம் கவனம் செலுத்த வேண்டும்” என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## தாக்கமுள்ள சுயகட்டுப்பாட்டு ஒழுக்கக்கோவை (1ம் பக்க தொடர்ச்சி)

தொழில்துறையின் முக்கிய பொறுப்பாக அமைவது தொழிலின் நம்பகத்தன்மையை பாதுகாத்துக் கொள்வதாகும். அதற்காக எல்லா ஊடகவியலாளர்களும் போதுமான கவனத்தைச் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். அவர்கள் எவரையும் தமது பிரசுரங்கள், வெளியீடுகள் காரணமாக தொந்தரவுக்கோ அல்லது மனவேதனைக்கோ உள்ளாக்கக் கூடாது.

லோசன் அறிக்கையில் கூட ஊடக தராதரத்தை மேம்படுத்தவது தொடர்பாக பல வி-யடங்கள் மும் மொழியப்பட்டிருக்கின்றது. குறிப்பாக பத்திரிகை வெளியிடுகின்ற விடயம் தவறானது என்று சுட்டிக்காட்டப் படுமானால் அதற்காக மன்னிப்புக் கோரல், தவறை சரி செய்தல், உரியவரின் கருத்தை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குதல் என்பன பற்றி அந்த அறிக்கை தெரிவிக்கின்றது. இவை இங்கிலாந்து பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்களாகும். 2012 ஆம் ஆண்டு அக்டோபரில் இங்கிலாந்து பிரதமர் அந்நாட்டின் பாராளுமன்றதில் பேசும் போது “தவறிழைக்கும் பத்திரிகைகள் மீது அபராதம் விதிக்கப்பட வேண்டும். ஊடகவியலாளர்களும் விசாரணை செய்யப்பட வேண்டும்” என்ற கருத்தை முன்வைத்திருந்தார். இவ்விடயமானது அரசாங்கம் சட்டம் விதிப்பதற்கு தயாராவதைக் குறிக்கின்றது.

ஆனால் தாக்கத்தை ஏற்படுத்தும் விதமான ஒழுங்குவிதிகளை நாம் பின்பற்றும் போது இவ்வாறான சட்டங்கள் கொண்டு வருவதை தவிர்க்க முடியும். அரசாங்கம் இவ்வாறு நேரடியாக தலையிட்டு சட்டங்களை விதிக்குமானால் அது ஊடகத்துறையை தவறான திசைக்கு செலுத்துவதாக அமைவதோடு கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கும் பாதகமாக அமையும். இந்நிலை ஏற்படாது பாதுகாக்க வேண்டியது ஊடகவியலாளர்களதும் பத்திரிகைகளின் ஆசிரியர்களதும் பொறுப்பாக அமைகின்றது என்று பிரபு லோர்ட் ஹன்ட் தெரிவித்துள்ளார்.

-ஒன்பதாவது தெற்காசிய ஊடக மாநாட்டின் போது பிடிக்கப்பட்ட படம். கோவாவின் ஆளுனர் ஸ்ரீ பாரத் விர் உடன் இம்மாநாட்டில் பங்குபற்றிய பிரதிநிதிகளைக் காணலாம்.

---


**இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தற்போதைய பணிப்பாளர் சபை**

சிவகுமார் நடேசன் (தலைவர்) ஏனைய உறுப்பினர்கள் வருமாறு: நிமல் வெல்கம, சிங்ஹ ரட்னதுங்க, மனிக் டி சில்வா, என்.எம்.அமீன், சுந்தர நிஹதமானி த மெல், சிறி ரணசிங்க, சீதா ரஞ்சனி, ஜி. கொத்திகொட, மற்றும் அஜந்தா ஹப்புஆராச்சி.

**இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் செயலகம்**

சுகுமார் ரொக்வூட் – பிரதம நிறைவேற்று அதிகாரி, கமல் லியனாரச்சி - சிங்கள மொழி மூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி, எம்.எஸ். அமீன் ஹுசைன் - தமிழ் மொழிமூல முறைப்பாட்டு பொறுப்பதிகாரி




Editor: Sukumar Rockwood - PCCSL
Design & Layout by : Priyadharshini - *SLPI*